சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

வா.சா. 4 நாள் :19.01.2026

அசல் வழக்கு எண். 115/2022

பெயர் நடராஜன் த/பெ ராமலிங்கம்

வயது 54 தொழில்

கிராமம் திருவெண்காடு தாலூக்கா சீர்காழி

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

எனக்கு இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வந்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வாதி மோகனை எனக்கு தெரியும். பிரதிவாதிகளையும் எனக்கு தெரியும். எதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். என் மனைவி சுகந்தி நடராஜன் திருவெண்காடு ஊராட்சி மன்றத்திற்கு முன்பு தலைவராக இருந்தார். அந்த ஊராட்சி மன்ற எல்லைக்குள் எதாவது நிலம் தொடர்பாக செய்வதற்கு ஊராட்சி மன்ற அனுமதி வேண்டுமென்றால் சரிதான். வாதி ஆவின் பாலகம் அமைப்பதற்காக அனுமதி கேட்டு விண்ணப்பிருந்தார். அரசு புறம்போக்கு நிலத்தில் அவ்வாறு பாலகங்கள் அமைக்க அனுமதி கொடுப்பது வழக்கம். இரண்டு, மூன்று பேருக்கு அவ்வாறு கொடுத்துள்ளோம். வாதி அனுமதி வாங்கியபிறகு தான் பாலகம் அமைத்தார். அந்த இடம் போக்குவரத்திற்கு இடையயூரான இடம் கிடையாது. அது பஞ்சாயத்திற்கு சொந்தமான அரசு புறம்போக்கு நிலம். அதே போன்று நான்கு வீதிகளிலும் நடைபாதை கடைபோட்டும் தள்ளுவண்டிகள் வைத்தும் நிறையே பேர் வியாபாரம் செய்கிறார்கள். அவ்வாறு உரிமம் வழங்குவதற்கும் கோவில் நிர்வாகத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது. தேர்முட்டிக்கு இந்த ஆவின் பாலகம் எந்தவித

இடையூறும் கிடையாது. தேர்முட்டிக்கு அருகில் ஒரு பேருந்து நிறுத்தம்
உள்ளது. அதற்கு வடக்கு புறத்தில் தான் இந்த பாலகம் உள்ளது.
வாதிக்கு அனுமதி கொடுத்த இடத்தில் தற்போது உயர் மின்கோபுர விளக்கு
அமைக்க அடித்தளம் போட்டு மின்விளக்குகளும் செயல்பட்டுவருகின்றது.
வாதி அமைத்த பாலகத்தின் இன்றைய மதிப்பு சுமார் இரண்டு லட்சம் வரை
இருக்கும். கீழே அரை அடிக்கு சிமெண்ட் தளம் போட்டிருந்தார். அதற்கு
மேல் இரும்பு தகடாலான பால் பூத் வைத்திருந்தார். அதற்குள் தான்
வியபாரத்திற்கான பால் பொருட்கள் வைத்திருந்தாரா என்று எனக்கு
தெரியாது. அந்த பால் பூத்தை பிரதிவாதி முருகன் ஆட்களை வைத்து
பொக்லைன் மூலம் தூக்கும்போது கயிறு அறுந்து விழுந்து மேற்படி பால்
பூத் சேதமானது. அவருக்கு பால் பூத்தை அகற்றுவதற்கு முன் நோட்டீஸ்
கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது கொடுத்திருக்க
வாய்ப்பில்லை. அந்த இடம் இந்து அறநிலைய துறைக்கு சொந்தமானது
அல்ல. அந்த விவரங்களை நான் நேரில் பார்த்த வகையில் தெரியும்.
அனுமதி கொடுத்த விவரம் என் மனைவி ஊராட்சி மன்ற தலைவர் என்ற
முறையில் எனக்கு நேரடியாக தெரியும். வாதி வேலையில்லாபட்டதாரி
என்றால் சரிதான். அதனால் தான் புறம்போக்கு நிலத்தில் அனுமதி
கொடுக்கப்பட்டது. பிரதிவாதிகள் பால் பூத்தை சேதப்படுத்தியதால் வாதிக்கு
நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

19.1.26

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

19/1/26